02 JAN 2024

ந.க.எண்.46250/2021/பதொ4

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்
அலுவலகம், கீழ்ப்பாக்கம்,
சென்னை–10.

நாள்.21.12.2023.

அரசாணை (3ப) எண்.07, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎச்2) துறை, நாள்.24.11.2023 செல்வி.இரா.சௌந்தர்யா, இளநிலை உதவியாளருக்கு தொடர்புறுத்தப்படுகிறது.

/ஆணைப்படி/

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்காக

பெறுநர்

1. செல்வி.இரா.சௌந்தர்யா, இளநிலை உதவியாளர்.
   – தூத்துக்குடி மண்டல இணைப்பதிவாளர் மூலமாக.
2. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்,
   தூத்துக்குடி மண்டலம்,
   தூத்துக்குடி.

நகல்: ந.க.எண்.45888/2022/பதொ4
நகல்: முக்கிய ஆணைத்தொகுப்பு – 2023.

Scanned with CamScanner

**<u>சுருக்கம்</u>**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கூட்டுறவுத் துறை – கருணை அடிப்படையிலான பணிநியமனம் – காலஞ்சென்ற அரசு ஊழியர் செ.இராமநாதன், கூட்டுறவு சார்பதிவாளரின் மகள் செல்வி. இரா.சௌந்தர்யா, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎச்2) துறை

அரசாணை (3ப) எண். 07

நாள்: 24.11.2023
சோபகிருது ஆண்டு,
கார்த்திகைத் திங்கள் – 8ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (2ப) எண்.73, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎல்2) துறை, நாள் 31.12.2020.
3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம் ந.க.எண்.46250/ 2021/பதொ4, நாள் 19.09.2023

**<u>ஆணை:–</u>**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதத்தில், திருநெல்வேலி மண்டலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) அலுவலகத்தில், பணியிலிருக்கும்போது 23.07.2011 அன்று மரணமடைந்த செ.இராமநாதன், கூட்டுறவு சார் பதிவாளரின் மகள் செல்வி இரா.சௌந்தர்யா என்பவர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் குறும வயது மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–இன் பிரிவு 58–யினை பயன்படுத்தி, மேற்படி சட்டத்தின் பிரிவு 20(6)(பி)–யினை அத்தனியரின் பொருட்டு தளர்த்தி, இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, துணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்), தூத்துக்குடி மண்டலத்தில் 16.07.2021 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார் என்று தெரிவித்துள்ளார்.

[...2]

Scanned with CamScanner

2. கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் செல்வி இரா.சௌந்தர்யா, இளநிலை உதவியாளரின் கருணை அடிப்படையிலான பணி நியமனத்தை அவர் பணியில் சேர்ந்த நாளான 16.07.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து தக்க ஆணை வழங்குமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அரசைக் கோரியுள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், மேலே பத்தி 2–ல் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், செல்வி இரா.சௌந்தர்யா என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், கூட்டுறவுத் துறையில், துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்), அலுவலகம் தூத்துக்குடி மண்டலத்தில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 16.07.2021 முற்பகல் முதல், தனியர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து, அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற அரசு விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. தனியரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட விவரத்தைப் பதிவு செய்ய, தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கே.கோபால்**
**அரசு கூடுதல் தலைமை செயலாளர்.**

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
செல்வி இரா.சௌந்தர்யா, இளநிலை உதவியாளர்,
(வழி: கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10).

[...3]

Scanned with CamScanner

முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலகம், தூத்துக்குடி.
கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர், தூத்துக்குடி.

**நகல்:**

இருப்பு கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்
கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009

07/12/2023

Scanned with CamScanner